**கவனிக்க.-** *2006.11.03 ஆந் திகதிய வர்த்தமானியின் II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1471 - 2006 නොවැම්බර් 10 වැනි සිකුරාදා - 2006.11.10

*1471 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1078 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1081 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1079 | ஏல விற்பனைகள் | 1082 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) பிரித்தானியக் கல்வி பிரதிநிதிகளின் சங்கம், இலங்கை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை மின்சாரம் சட்டமூலம் 2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, நவெம்பர் 17 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 03 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## பெறுகைகள் அறிவித்தல் - 2007

பொது வைத்தியசாலை - வவுனியா

**2007 ஆம் ஆண்டுக்கு தேவையான வழங்கல்கள் / சேவைகள்**

வவுனியா பொது வைத்தியசாலைக்கு பின்வரும் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் 2007, சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு கோரப்படுகின்றன.

1. வழங்கல்கள்/சேவைகளின் விபரமும் வைப்புத் தொகைகளும்

| இல. | விபரம் | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக் கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| (அ) | உணவு வழங்கல் (சமைத்த, சமைக்காத) | 1,000 | 50,000 | 25,000 |
| (ஆ) | அழுக்கு துணிகளை சலவை செய்தல் - | | | |
| | தொகுதி I | 500 | 15,000 | 75,000 |
| | தொகுதி II | 500 | 15,000 | 50,000 |
| (இ) | பாதுகாப்புச்சேவை | 1,000 | 50,000 | |
| (ஈ) | துப்பரவு சேவை | 1,000 | 50,000 | |
| (உ) | கணனி பராமரிப்புச் சேவை | 500 | 10,000 | |
| (ஊ) | குளிரூட்டி பராமரிப்பு | 1,000 | 15,000 | |
| (எ) | பிணவறை குளிரூட்டி பராமரிப்பு | 1,000 | 5,000 | |

2. **பெறுமதி ஆவணம்**.- 01.10.2006 ஆந் திகதிக்கு பின்னர் அந்தந்த பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதம் (பொது 170 படிவம் - "அ" விற்கும் "ஆ" விற்கும் மாத்திரம்) சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது இத்தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து வங்கி உத்தரவாதப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்கனவே பொது வைத்தியசாலைகளில் ஒப்பந்த சேவையில் ஈடுபடுபவர்களும் பெறுமதி ஆவணத்தை புதிதாக விண்ணப்பம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வகையிலும் முன்னைய ஒப்பந்தத்துடன் இவற்றை தொடர்புபடுத்தாது புதிதாக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3. **வைப்புக்கள்**.- பெறுகைக்கான வைப்புத் தொகைகளை (மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும்) பொது வைத்தியசாலை, நிதி முகாமைத்துவ அலகில் உள்ள கொடுப்பனவு கிளையில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

4. **வியாபார பதிவுச் சான்றிதழ்**.-பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் வியாபார பதிவு படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **அனுபவ சான்றிதழ்**.-கடந்தகால நிகழ்கால அனுபவ சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காவல் சேவை வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. **வரி**.-உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய வரி அறவீடுகளுக்கும் வ ரி செலுத்துதல்களுக்கும் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் உட்படுதல் வேண்டும்.

7. **பெறுகைப்படிவங்கள்/ ஆவணங்கள்**.-பெறுகை ஆவணங்கள் 27.11.2006 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையும் வவுனியா பொது வைத்தியசாலை நிதி முகாமைத்துவ அலகின் கணக்கு கிளையில் வேலை நேரங்களில் வழங்கப்படும். பெறுகைப்படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும்.

8. **பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை**.-சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "தலைவர், பெறுகைகள் குழு, பொது வைத்தியசாலை, வவுனியா" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் / சேவைகள் - 2007 ................" என குறிப்பிட்டு கோடிட்ட இடத்தில் சேவையின் தன்மையும் குறிப்பிடப்படல் வேண்டும். நேரடியாக வழங்கினால் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒவ்வொரு வழங்கல்கள், சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும். பெறுகைகள் வைப்புத் தொகையை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

9. *இறுதித் திகதி*.- சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் 28.11.2006, மு. ப. 11.00 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

10. *பெறுகைகள் திறத்தல்*.- பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் பெறுகைப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்கள் இரத்துச் செய்யவோ நிறுத்தி வைக்கவோ புதிதாக கோருவதற்கோ பெறுகைகள் குழுவுக்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைகுழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும். மேலதிக விபரங்களை 060-2241561 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தலைவர்.

பெறுகைக் குழு,
பொது வைத்தியசாலை,
வவுனியா.

11-227

## இலங்கை புகையிரத சேவைகள்

*நிலையான பாதையைப் பராமரிப்பதற்கான கருவிகளையும் உபகரணங்களையும் வழங்குதல்*

தலைவர், திணைக்கள கொள்வனவுக் குழு, இலங்கைப் புகையிரத சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் நிலையான பாதையைப் பராமரிப்பதற்கான கருவிகளையும் உபகரணங்களையும் வழங்குவதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ விநியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் தமது விலைமனுக்களை அதிகாரத் தத்துவம்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாக சமர்ப்பிக்கலாம்.

2. கேள்விகள் 2006.12.14 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளப்பெறப்பட முடியாத கேள்விப் பணமாக ரூபா 2,000 ஐ அல்லது அதற்கு சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2006.12.11 பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப்பத்திரங்களில் மாத்திரமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. உற்பத்தியாகும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் யாவும் ஐ. எஸ். ஓ. 9001:2000 தர சான்றிதழுக்கு அல்லது அதற்கு சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை நியமத்துக்கு உட்பட்டதாயும் வழங்குனரால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. பொது முகாமையாளர் அலுவலகம், இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இல் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கப்படலாம் :-

தலைவர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

7. கேள்விப் பத்திர ஆவணங்களை எந்தவிதக் கட்டணமுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலனை செய்யலாம்.

8. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் :

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,

புகையிரதக் களஞ்சியத் திணைக்களம்,
த. பெ. இல. 1347.
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044/94 (11) 2436818.

தொடர்பு இல.: எஸ். ஆர். எஸ்./எவ் 6523

தலைவர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவை.

11-247

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம், வவுனியா

சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை

பின்வரும் சான்றுப் பொருட்களான பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமானவை எதிர்வரும் 11.11.2006 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**நிபந்தனைகள் :**

(1) ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தங்களுடன் தேசிய அடையாள அட்டையை கொண்டுவருதல் வேண்டும்.

(2) சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

நீதிவான்,
மாவட்ட நீதிமன்றம்,
வவுனியா.

| வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| ஏ.ஆர் 47/05 | சி. சி. 11639 இலுமாலா | 02 |
| ஏ.ஆர் 47/05 | எச் 571933 கொண்டா | |
| ஏ.ஆர் 341/04 | 23983 | |
| ஏ.ஆர் 262/05 | சி400 165 லுமாலா சைக்கிள் | 03 |
| ஏ.ஆர் 262/05 | ரிஎன் 12765 லுமாலா சைக்கிள் | |
| ஏ.ஆர் 262/05 | 115457715 லுமாலா சைக்கிள் | |
| ஏ.ஆர் 861/03 | எப்77368 லுமாலா சைக்கிள் | 01 |
| ஏ.ஆர் 379/05 | 1160563 லுமாலா சைக்கிள் | 01 |
| ஏ.ஆர் 725/03 | 220289 லுமாலா சைக்கிள் | 01 |
| ஏ.ஆர் 52/06 | 044462 லுமாலா சைக்கிள் | 01 |
| பி.ஆர் 120/05 | 55634262 லுமாலா சைக்கிள் | 01 |
| ஏ.ஆர் 739/03 | எல்478 லுமாலா சைக்கிள் | 01 |
| பி.ஆர் 71/05 | 57179909 லுமாலா சைக்கிள் | 01 |
| 44009 | 8எல்03427 லுமாலா சைக்கிள் | 01 |
| 42880 | 55776289 01 | |
| 42754 | யூஎப் 81874 01 | |

| வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 37181 | 55675423 | 01 |
| 39347 | ஏ400221 | 01 |
| 50053 | 455 | 01 |
| 42879 | 55702219 | 01 |
| 33921 | 376080 | |
| 33921 | ஜே016734 | 03 |
| 33921 | ஜீ. பி. 8527 | |
| | 55594488 | 01 |
| 38467 | 50685871 | 01 |
| 38196 | இலக்கம் இல்லாத | 01 |
| 33113 | இலக்கம் இல்லாத | 01 |
| 25467 | 55576934 | 01 |
| 41271 | 57138612 | 01 |
| 40533 | 55541888 | 01 |
| 35731 | சி1534332 | 01 |
| 33712 | ஏ1264541 | 03 |
| 33712 | 55760640 | 01 |
| 33712 | ரி43479 | 01 |
| 35647 | 55778534 | 01 |
| பி50/01 | எப்ஜே12522 | 01 |
| பி772/02 | 56041887 | 01 |
| பி771/02 | 057238 | 01 |
| பி689/02 | சிசி1407 | 01 |
| பி599/02 | 55576934 | 01 |
| பி464/02 | 555எல்5825 | 01 |
| பி365/02 | 56003409 | 01 |
| பி1717/03 | 55623553 | 01 |
| பி271/03 | 55654477 | 01 |
| பி93/03 | எப்எப்7358 | 01 |
| பி442/00 | 24335751 | 01 |
| பி602/00 | ஈ5323248 | - |
| பி602/00 | எச்5524029 | 02 |
| பி420/03 | 55952321 | 01 |
| பி603/00 | 5506177 | 01 |
| பி1013/04 | 56சி96474 | 01 |
| பி1803/04 | 55927689 சீ. ஜீ. | 01 |
| பி1537/04 | 56சி 73426 | 01 |
| பி1607/04 | எச்5547663 | - |
| பி1607/04 | யூ. டீ-டீ சைக்கிள் | 02 |
| பி1140/04 | சி5390241 | - |
| பி1358/04 | எச்8389267 | 01 |
| பி863/04 | 57346641 | 01 |
| பி497/04 | எப்என்502241 | 01 |
| பி334/05 | 69229003 | 01 |
| பி995/05 | 56சி31423 | 01 |
| பி799/05 | 04சி8811 | 01 |
| பி283/05 | 57204646 | - |
| பி283/05 | 68235449 | 04 |
| பி283/05 | 56082784 | |
| பி283/05 | 68231118 | |
| பி378/05 | 4800369 | |
| பி378/05 | 57176371 | 02 |
| பி478/05 | 55537995 | 01 |
| பி171/05 | 55710663 | |
| பி171/05 | 57206961 | |
| பி171/05 | சிசி14071 | |
| பி171/05 | 56சி41887 | 06 |

| வழக்கு இலக்கம் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| பி171/05 | 57141124 | - |
| பி171/05 | 55778534 | - |
| பி1171/05 | 57175322 | 01 |
| பி1172/05 | 72161275 | 01 |
| பிஆர்100/05 | 55723121 | 01 |
| பி1101/05 | 55781413 | 01 |
| பி1583/04 | 556669365 | 01 |
| 1309/04 | 55579959 | 01 |
| பி1557/04 | ரியூ3499 | 01 |
| பி10904/04 | 55981809 | 01 |
| பி139/04 | 55905866 | 01 |

**வழக்கிலக்கம் இல்லாத மண்ணெண்ணை**

10 லீற்றர் மண்ணெண்ணை - 1 கான்
10 லீற்றர் மண்ணெண்ணை - 1 கான்
20 லீற்றர் மண்ணெண்ணை - 1 கான்
10 லீற்றர் மண்ணெண்ணை - 1 கான்
20 லீற்றர் மண்ணெண்ணை - 1 கான்
10 லீற்றர் மண்ணெண்ணை - 1 கான்

| வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 33124 | வாள் | 01 |
| 33128 | வாள் | 01 |
| 4564 | வாள் | 01 |
| 4400 | வாள் | 01 |

வழக்கிலக்கம் இல்லாத வாள் - 10

வழக்கு இல. இல்லாத துருப்பிடித்த பாவிக்க முடியாத சைக்கிள்கள்

02ஈஆர்0978
55927881 - லுமாலா
ஜீஎன்2415
எச்4429463 - இகோ
எஸ்எம்6387
2பி6352
0608799
எம்சி17632
ஏ12760
எம்5573456
ஜீ5958804
ஜீ3576488
097டீ25
எப்சிசி 11867
114466656
சி28எல்6039
0804891
ஏகே46132
பி 35133
0409269
ஈ322772
01ஏ7596
ஜே0132181
பி154026
ஜேஎன்40210
ஜீ253862

| | | | |
|---|---|---|---|
| 962222 | | 46278 | - வாள் - 01 |
| பி124111900 | | | - கோடரி - 01 |
| ஏசி 17057ஏ | | | - உளி - 01 |
| 809906 | | | - அரம் - 01 |
| 05சட்9551 | | | |
| | | 47797 | - கோடரி - 03 |
| பிஆர் 19/06 | - வாள் - 01 | 49272 | - வாள் - 02 |
| பிஆர் 18/06 | - வாள் - 01 | | - அலவாங்கு - 01 |
| பி1732 /06 | - வாள் - 02 | | - கோடரி - 01 |
| | - அலவாங்கு - 01 | | - கத்தி- 01 |
| | - கோடரி - 01 | | |
| 48623 | - வாள் | 39906 | - கோடரி - 01 |
| 44920 | - வாள் - 01 | | - மண்வெட்டி - 01 |
| | - உளி - 01 | | |
| | - மரச்சுத்தியல் - 01 | 50130 | - மண்வெட்டி - 02 |
| 44971 | - உளி - 01 | | - கத்தி- 02 |
| | - மரச்சுத்தியல் - 01 | | - கோடரி - 02 |
| | - வாள் - 01 | | |

11-249

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 7, லோங்டன் பிளேஸ், மலலசேகர மாவத்த, 30/ 46 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த லக்ஷ்மி டி லீ டீ சொய்ஸா ஆகிய நான் கொழும்பு 7, லோங்டன் பிளேஸ், மலலசேகர மாவத்தை, 30/46 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தர்ஷினி அன்னா டீ சொய்ஸா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு சுரவீ மனோஜி வீரசூரிய என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2000, யூலை 10 ஆந் திகதியும் 57 ஆம் இலக்கமும் கொண்ட அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கிறேன்.

லக்ஷ்மி டி லீ டீ சொய்ஸா,

2006, ஒற்றோபர் 9.

11-179

## நொத்தாரிசு பரீட்சைக்குத் தோற்றுதல்

கொழும்பு மாவட்டம், மொறட்டுவ பிரதேச செயலகம், சீ 31, ஜீ 2, சொய்சாபுர, மொரட்டுவ எனும் முகவரியில் வதியும் திருமதி துர்க்கா கலைக்குமரன் (தேசிய அடையாள அட்டை இல. 766671977V) ஆகிய நான் நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 107 (தற்போது அத்தியாயம் 110) இன் முதலாவது அட்டவணையின் 'ஆ' பகுதியின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கும் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவும் அதன்பலனாக தமிழ்மொழி மூல நொத்தாரிசுவாக தெரிவாவதற்காகவும் அனுமதி பெறுவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

துர்க்கா கலைக்குமரன்.

சீ 31, ஜீ 2, சொய்சாபுர,
மொரட்டுவை.
2006, ஒற்றோபர் 27.

11- 234

## அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். கொடிகாராவினால் 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி அத்தாட்சி செய்த 38 ஆம் இலக்கம் கொண்ட அற்றோர்ணி தத்துவப்பத்திரம் மூலமாக கொழும்பு - 07, ரொஸ்மீட் இடத்தில் இருக்கும் 116/10 ஆம் இலக்கத்தில் வசிக்கும் இராஜபக்ஷகெதர கயானி கஞ்சுல இராஜபக்ஷ ஆகிய எனக்கு வழங்கியுள்ள அற்றோனி தத்துவத்தை 2006.10.17 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதுடன் செல்லுபடியாகாது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கும் அரசாங்கத்திற்கு இதன் மூலம் அறிவிப்பு செய்கிறேன்.

மேலும் வழங்கப்பட்ட அற்றோர்ணி தத்துவபத்திரத்தில் குறிக்கப்பட்டு இருக்கும் விடயங்கள் குறித்து மாற்றிக் கொள்ளல்களுக்கு நான் பொறுப்பாளியல்ல என்பதையும் அறிவித்துக்கொள்கிறேன்.

ஆர். ஜி. கயானி கஞ்சுல இராஜபக்ஷ.

11- 235

# ஏல விற்பனைகள்

**டீ. எப். சி. சி. வங்கி**

(முன்பு இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை.*

**விலைமதிப்பான காணியொன்றின் ஏல விற்பனை**

**2642 ஆம் இலக்கம் கொண்ட பிணை உறுதிகளின் கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்தின் விவரணம் -**

**வடமேல் மாகாணம், குருநாகலைப் பிரதேசத்தில் தேவமதி ஹத்பத்துவின் கிரித்தலான கோரளையில் உள்ள தேக்காவ கிராமத்தில் உள்ள "கொங்கஹாமுலஹேன" வும் "கீனகஸ்பிட்டிய" வும் ஒன்றிணைக்கப் பட்ட நிலபரப்புக்குள் முழுமையாக அடங்கிய உரிமைபெற்ற நிலஅளவையாளர் இராந்ததிஸ்ஸ கோட்டம்பகே என்பவரால் 2004,யுன் 18 ஆந் திகதியன்று நிலத்துண்டுகள் 01 உம், 02 உம் என பிரித் தெழுதப்பட்டவை. மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அங்குள்ள யாவும்**

**(விஸ்தீரணம் : 3ஏக்கர் 3றூர்ட் 4பேர்ச்சஸ்)**

*("சிசிர என்டபிரைசஸ்", ஹெட்டிபொல என்ற பெயரைக் கொண்ட நிறுவனத்தின் தனி உரிமையாளரான ஹெட்டிபொலவைச் சேர்ந்த ரத்நாயக்க முதியன்சேலாகே தயா ஸ்ரீயானி என்பவரால் 2004, திசெம்பர் 8 ஆந் திகதி அன்று பிணை உறுதி இல. 2642 ஐப் பொது நொத்தாரிசு டி. எஸ். ஐ. வெத்தாவ என்பவருக்கு முன்னிலையில் அத்தாட்சி பெற்று கொடுப்பனவு செய்ய முடியாத பட்சத்தில் டி.எப். சி. சி. வங்கிக்கு ஈடுசெய்யப்பட்டது.)*

டி. எப். சி. சி. வங்கியினால் எமக்கு அளிக்கப்பட்ட அனுமதிப்படி 2006, நவெம்பர் 29 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- சித்திகரமான கொள்வனவாளர் ஏலம் முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% ;

(3) விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்);

(4) ரூபா 22,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவில் 50% ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசு கட்டணம் ரூ. 2000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு டீ. எப். சி. சி. வங்கியின் சட்ட திணைக்களத்தை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 011-2440366.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையின் கீர்த்தி வாய்ந்த பட்டய
ஏலதாரர் மற்றும் ஆலோசக மதிப்பீட்டாளர்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 55ஏ, தர்மபால மாவத்தை, |
| கண்டி, | கொழும்பு, |
| தொலைபேசி 081-2227593 | தொலைபேசி : 011-2441761 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 011-2448526 |
| | ஈ-மெயில்: samera@ sri.lanka. net |

11-205

---

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – புத்தளம் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை அறிவிப்பு*

**வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கற்பிட்டி பிரதேசத்தில் வடக்கு அக்கரப் பத்துவ திகான என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் சின்னத்தோட்டம் மற்றும் வீட்டுத்தோட்டம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான இடத்திற்கு உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜே. மு. வி. ராஜநாயகம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006.06.12 ஆந் திகதிய 4302 ஆம் இலக்க வரைபடத்தில் அளந்து வேறாக்கப்பட்ட லொட் 1 என காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் : 0ஏக்கர். 1றூட் 2பேர்ச்சஸ்)**

செய்யது மொஹம்மட் மொஹம்மட் பியாஸ் கடப்பாடுடையவராக ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் புத்தளம் பிரசித்த நொத்தாரிசு எம். எம். இக்பால் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.10.12 ஆந் திகதிய 23283 ஆம் இலக்க, முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால் ;

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கீழே குறிப்பிடும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2006.11.30 ஆந் திகதிய மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2006.09.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.09.22 ஆந் திகதிய ஜலண்ட், திவயின மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.)

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏல விற்பனை இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைப் பணமாகச் செலத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூர் ஆட்சிக்கான விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணமாக கொள்வனவு விலையில் 2 1/2%;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;

(5) விற்பனைச் செலவும் வேறு செலவுகளும் ;

(6) விற்பனை பத்திரத்தைத் தயாரிப்பதற்கான முத்திரைக் கட்டணமும் நொத்தாரிசுக் கட்டணமும் 2000.

விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% பணத்தை ஏலவிற்பனை தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நாஷனல் வங்கி க்குச் செலுத்தல் வேண்டும். 30 நாட்களுக்குள் மீதிப் பணத்தைச் செலுத்தாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட 10% பணத்தை பறிமுதல் செய்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும் "ஹட்டன் நாஷனல் வங்கி - புத்தளம் கிளை (தொ. பே. 032-2265582/032- 2265581)" அல்லது "கொழும்பு 10, டீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479 இல் தலைமை காரியாலயம், பிரதம முகாமையாளர்-கடன் அறவீடுகள் (தொலைபேசி : 2661815, 2661816)" மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

என். எச். பி. ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் மற்றும்
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரும்.

என். எச். பி. ஆரியரத்ன,
இல. 34/31, அல்லது 32
சட்டத்தரணிகள் காரியாலயம்,
கொழும்பு 12.

11-236